திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த பொற்கொல்லர்களுக்கு வேலை கொடுக்கும் முகத்தான் (ancillary industries) என்ற முறையில் எல்லா மாவட்டங்களிலும் தொழில் துவக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பொற்கொல்லர்களைப் பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் என்ன என்ன திட்டங்கள் அவர்களுக்காகச் செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லலாம்.

ஊர்க்காவல் படை

6. கேள்வி.—*திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மொத்தம் இருபதினுயிரம் பேர்களைக் கொண்டு நிறுவுவதாக இருந்த "ஹோம் கார்டு" படையின் எண்ணிக்கையைக் குறைக்கச் சொல்லி அரசாங்கம் உத்திரவிட்டதற்குக் காரணமென்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஊர்க்காவல் படையை 19,924 படை வீரர்களை வைத்துக்கொண்டு அமைப்பதாக இருந்தது. இந்த எண்ணிக்கை இப்போதும் மாறவில்லை. ஆயினும் துவக்கத்தில் இப் படையை சென்னை மாநகரிலும் மற்றும் 18 முக்கியமான நகர்களிலும் அமைக்க முடிவு செய்யப்பட்டது. சென்னை நகரில் உள்ள பிரிவில் 4,000 படைவீரர்களும் மற்ற 18 நகர்களிலுள்ள பிரிவுகளில் 6,000 படை வீரர்களும் இருப்பர். ஊர்க்காவல் படை அமைக்கும் விஷயத்தில் அனுபவம் பெற்ற பிறகு, ஏற்கனவே இப்படை செயல்பட்டுவரும் இடங்களில் அவற்றை விஸ்தரிப்பதுபற்றியும் இதர இடங்களிலும் அவற்றைத் துவக்குவது பற்றியும் ஆலோசிப்போம்.

The target strength of 19,924 for the Home Guard remains unaltered. However, it was decided that to start with, the organization should be raised in Madras City and 18 important towns in the State. Madras will have 4,000 Home Guards and the 18 towns will have 6,000 Home Guards in all. After experience is gained, the question of expansion of the organization in places where it has been already functioning and its extension to other places will be considered.

திரு. இராம. அரங்கண்ணல் : கனம் அமைச்சர் அவர்கள் பத்தாயிரம் பேர்களே ஹோம் கார்டு படையில் சேர்ந்திருப்பதாக இப்போது கணக்குச் சொன்னுர்கள். இதில் இன்னும் அதிகமாகச் சேராமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்பதை அறிவிக்க முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சென்னை நகரில் நான்கு ஆயிரம் பேர்களும், வெளி ஊர்களில் இருந்து ஆறு ஆயிரம் பேர்களும்—ஆக மொத்தம் பத்தாயிரம் பேர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதில் அனுபவம் பெற்ற பிறகு மேற்கொண்டு சேர்க்க உத்தேசம் உண்டு.

6th August 1963]

திரு. இராம. அரங்கண்ணல் : தேசத்தைப் பாதுகாக்க வேண்டுமென்ற காரணத்தினால் ஏராளமான பேர் ஊர்க்காவல் படையில் சேருவதற்குக் கையெழுத்திட்டிருக்கிறார்கள். அப்படி இருக்க பத்தாயிரம் பேர்கள் மட்டுமே ஏன் சேர்த்துக் கொள்ளப் பட்டிருக்கிறார்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முதலில் இது ராணுவப் படை இல்லை. ஊர் வேலையைக் கவனிப்பது தான். இதிலும் ஏராள மான பேர்கள் சேருவதற்கு முன் வந்திருக்கிறார்கள். ஓரளவு இப்போது சேர்த்துக்கொண்டு பயிற்சி அளித்தால் இந்த அனு பவத்தின் பேரில் பின்னாலும் மேற்கொண்டும் பலரைச் சேர்த்துப் பயிற்சி அளிக்கலாம் என்பது உத்தேசம்.

திரு. இராம. அரங்கண்ணல் : கடந்த உலகப் போரின்போது பிரிட்டனில் ஹோம் கார்டுகள் சிறந்த முறையில் சேவை செய் திருக்கிறார்கள் என்பதாக சர்ச்சிலே பாராட்டியிருக்கிறார்கள். இப்போதும் நம் நாட்டின் நெருக்கடி நிலைமை நீடிப்பதால் இன்னும் அதிகமான பேர்களைச் சேர்த்துக்கொண்டு பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பிரிட்டனில் அமைக்கப்பட்ட ஹோம் கார்டு படை வேறு. இங்கே அமைக்கப்பட்டுள்ள ஊர்க் காவல் படை வேறு. இப்போது பதினெட்டு நகரங்களில் துவங் கப்பட்டிருக்கிறது. இதில் ஏற்படும் அனுபவத்தை வைத்துக் கொண்டு மேலும் இதை விஸ்தரிக்கவேண்டுமென்பது அரசாங்கத் தின் உத்தேசம்.

Salem Municipal College

* 7 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Finance be please to state—

(*a*) whether the Government have paid any compensation to the Salem Municipality in respect of the buildings of the Salem Municipal College taken over by the Government; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

(அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

* 8 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Municipal College at Salem had been taken over by the Government; and

(*b*) if so, on what conditions?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes.